**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:612** **நாள்: 25.10.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், கொடுங்கையூர், பெருங்குடி மற்றும் அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகங்களில் பயோ- மைனிங் பணிகள் மூலம் நிலங்கள் மீட்டெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், கொடுங்கையூர், பெருங்குடி மற்றும் அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகங்களில் பயோ- மைனிங் பணிகள் மூலம் நிலங்கள் மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் – பயோ மைனிங் பணிகள்

350 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பயோமைனிங் தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்பட வேண்டிய மொத்தம் 66,52,506 மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளில், இதுவரை சுமார் 47,85,993 மெட்ரிக் டன் (72%) கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 22 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மே 2027-க்குள் நிறைவு செய்யப்படும், மொத்தமாக 200 ஏக்கர் நிலம் மீட்டெக்கப்படும்.

அத்துடன், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கூடுதலாகக் கண்டறியப்பட்டுள்ள 12.13 லட்சம் மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளைப் பயோமைனிங் முறையில் அகற்றுவதற்கான திட்டம் ரூ.116.89 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தின் – பயோ மைனிங் பணிகள்

250 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் முதற்கட்டமாக (Phase-I), பயோமைனிங் தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்பட வேண்டிய மொத்தம் 29,28,398 கன மீட்டர் மரபுக் கழிவுகளும் (100%) முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 96 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இரண்டாம் கட்டமாக (Phase-II), பயோமைனிங் தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்பட வேண்டிய மொத்தம் 5,50,000 மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளில், இதுவரை சுமார் 1,08,073 மெட்ரிக் டன் (20%) கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இத்திட்டம் மார்ச் 2027-க்குள் நிறைவு செய்யப்பட்டு, இதன் மூலம் சுமார் 75 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும்.

அத்துடன், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கூடுதலாகக் கண்டறியப்பட்டுள்ள 16.50 லட்சம் மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளைப் பயோமைனிங் முறையில் அகற்றுவதற்கான திட்டம் ரூ.158.93 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தின் – பயோ மைனிங் பணிகள்**

5.5 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட, அத்திப்பட்டு பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் முதற்கட்டமாக (Phase-I), பயோமைனிங் தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்பட வேண்டிய மொத்தம் 1,07,811 கன மீட்டர் மரபுக் கழிவுகளும் (100%) முழுமையாக அகற்றப்பட்டுள்ளன.

மேலும், அத்திப்பட்டு பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் இரண்டாம் கட்டமாக (Phase-II), பயோமைனிங் தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்பட வேண்டிய மொத்தம் 72,083 மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளில், இதுவரை சுமார் 64,263 மெட்ரிக் டன் (89%) கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இத்திட்டம் டிசம்பர் 2026-க்குள் நிறைவு செய்யப்பட்டு, இதன் மூலம் சுமார் 5.5 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**